தமிழ் நாடு மாநில வாணிப கழகம் லிட்.,
மாவட்ட மேலாளர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம்

ந.க.எண்:1328/2016 (ஈ) நாள்: 01.12.2016

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

காலி அட்டை பெட்டிகள் மற்றும் காகித கழிவுகள் சேகரித்துக்கொள்ளல்
அனுமதிக்கான ஒப்பந்தப்புள்ளி விபரங்கள் கோரல்
(கோட்டம் வாரியாக – மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம்)

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளிக்கோரும் அலுவலர் /முகவரி | மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம், நாகப்பட்டினம் மாவட்டம், இருப்பு:திருபுவனம். |
| 2. | ஒப்பந்தம் செய்யப்படும் பணிகள் சம்பந்தமான விபரம் | நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனை கடைகளில் உள்ள காலி அட்டை பெட்டிகள் மற்றும் காகித கழிவுகள் சேகரித்துக் கொள்ள விற்பனை அனுமதி. (கோட்டம் வாரியாக) |
| 3. | விண்ணப்பம் கிடைக்குமிடம் | மாவட்ட மேலாளர் அலுவலகம், டாஸ்மாக் லிட்., எண்:80, தொழிற்பேட்டை வளாகம், திருபுவனம்- 612 103. |
| 4. | விண்ணப்ப படிவம் விலை, செலுத்தும் விபரம் | விண்ணப்பத்தின் விலை ரூ.1050/- (ரூபாய் ஆயிரத்து ஐம்பது மட்டும்) கேட்பு வரைவோலையாக கும்பகோணத்தில் மாற்றத்தக்கவகையில் மாவட்ட மேலாளர், டாஸ்மாக், நாகப்பட்டினம் என்ற பெயரில் செலுத்த வேண்டும். |
| 5. | விண்ணப்பம் எந்தத் தேதி முதல் எந்தத் தேதி வரை பெறலாம் | விண்ணப்பம் 05.12.2016 முதல் 23.12.2016 வரை காலை 10.00 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டும் (அலுவலக நாட்களில் மட்டும்). |
| 6. | செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்புத் தொகை (E.M.D) (By DD only) | ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மேற்கண்ட தொகையை கேட்பு வரைவோலையாக கும்பகோணத்தில் மாற்றதக்கவகையில் மாவட்ட மேலாளர், டாஸ்மாக், நாகப்பட்டினம் என்ற பெயரில் செலுத்த வேண்டும். |
| 7. | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விண்ணப்பதாரர் நேரில் நாகப்பட்டினம் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்ப்பதற்கான கடைசி நாளும், நேரமும் மற்றும் இடமும். | 28.12.2016 மாலை 3 மணி வரை. மாவட்ட மேலாளர் அலுவலகம், டாஸ்மாக் லிட்., எண்:80, தொழிற்பேட்டை வளாகம், திருபுவனம்- 612 103. |

| | | |
|---|---|---|
| | | |
| 8. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடமும், நாளும் மற்றும் நேரமும். | மாவட்ட மேலாளர் அலுவலகம்/ டாஸ்மாக் லிட்., எண்:80, தொழிற்பேட்டை வளாகம், திருபவனம்- 612 103.<br>28.12.2016 பிற்பகல் 03.30 மணி. |
| 9. | ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கும் முறை | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும் நபர்களில் எவர் அதிகத் தொகையை குறிப்பிடுகிறாரோ அவரே அந்த குறிப்பிட்ட கோட்டத்திற்கு ஒப்பந்ததாரராக தேர்ந்தெடுக்கப்படுவார். |
| 10. | நிபந்தனைகள் :<br>1. மேற்குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் பெறப்படும் ஒப்பந்துபுள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.<br>2. பிணைவைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலையின்றி பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமல் தள்ளுபடி செய்யப்படும்.<br>3. சரியாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.<br>4. ஒப்பந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டமைக்கு சான்றாக ஒப்பந்த நிபந்தனைகளின் கடைசியில் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு கையொப்பமிடப்படாத ஒப்பந்துபுள்ளி தள்ளுபடி செய்யப்படும்.<br>5. ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும் நபர் முன்னதாக காலி அட்டைப்பெட்டிகள் மற்றும் காகிதகழிவுகள் உரிமம் பெற்று அதில் ஏதேனும் தொகை செலுத்தாமல் இருந்தாலோ அல்லது தவறான செயல்களில் ஈடுபட்டிருந்தாலோ அந்த நபரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.<br>(i) ஒப்பந்தப்புள்ளி கொடுத்த விண்ணப்பதாரர்களில் ஆஜரில் இருக்கும் விண்ணப்பதாரர்கள் முன்னிலையில் மாவட்ட மேலாளர் அவர்களால், திருபுவனம் டாஸ்மாக் அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்கள் 28.12.2016 அன்று மாலை 03.30 மணி முதல் கோட்டம் வாரியாக ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.<br>(ii) அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் (அல்லது) எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் எந்தவித காரணங்களையும், கூறாமலேயே நிராகரிக்க மாவட்ட மேலாளருக்கு முழு அதிகாரமுள்ளது.<br>(iii) தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் காப்புத் தொகையாக ரூ.1,00,000/- மாவட்ட மேலாளர் குறிப்பிடும் தேதிக்குள் வரைவோலையாக செலுத்த வேண்டும். இல்லையெனில் செலுத்திய பிணை வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும்.<br>(iv) தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத்தொகை அவர் செலுத்த வேண்டிய காப்புத் தொகைக் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளியில் தேர்ந்தெடுக்கப்படாத நபர்களின் பிணை வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி வேலைகள் முடிந்தபின் திருப்பிதரப்படும். | |

துணை ஆட்சியர்/மாவட்ட மேலாளர்,
டாஸ்மாக் லிட்.,
நாகப்பட்டினம் மாவட்டம்
இருப்பு:திருபுவனம்

விண்ணப்ப படிவ எண்:

1. நாகப்பட்டினம் கோட்டம்.
2. மயிலாடுதுறை கோட்டம்.

தமிழ் நாடு மாநில வாணிபக்கழகம், நாகப்பட்டினம் மாவட்டம்

(Office Use only)

Tender document issued to Thiru …………………………..
S/O ……………………… Residing at……………………
for Carton tender to be held on ………………………… at
the O/o District Manager, TASMAC Ltd., Nagapattinam at
Thirubuvanam. DD No …………………Dated …………….
Name of the Bank ……………………………………………….
Rs.1050/- (Rupees one thousand fifty only)
Division :

Deputy Collector/District Manager,
TASMAC Ltd., Nagapattinam

மதுபான சில்லறை விற்பனை கடைகளில் காலி அட்டைப்பெட்டிகள் மற்றும் காகிதக் கழிவுகள் சேகரித்து ஒட்டுமொத்த விற்பனை செய்ய ஒப்பந்தப்புள்ளி தெரிவிக்கும் விண்ணப்பம்.

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரது பெயர் மற்றும் முகவரி (முகவரிக்கான ஆதாரம் இணைக்கப்பட வேண்டும்) | |
| 2. | பிறந்த தேதி மற்றும் வயது | |
| 3. | குடும்ப அட்டை எண் | |
| 4. | தொலை பேசி எண்: | |
| 5. | ஒப்பந்தம் செய்யப்படும் பணிகள் சம்பந்தமான விபரம் | நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனை கடையில் அன்றாடம் சேகரமாகும் காலி அட்டைப்பெட்டிகள் மற்றும் காகிதக்கழிவுகள் அவ்வப்போது எடுத்து சேகரித்து கொள்ளுதல் மற்றும் விற்பனை அனுமதி. நாகப்பட்டினம்/ மயிலாடுதுறை கோட்டம் வாரியாக. |
| 6. | பணி மேற்கொள்ளப்படவேண்டிய மாவட்டத்தின் பெயர் | நாகப்பட்டினம். |

| | | |
|---|---|---|
| 7. | மேற்படி மாவட்டத்தின் பணி மேற்கொள்ளப்பட வேண்டிய கோட்டத்தின் விபரங்கள் | 1. நாகப்பட்டினம், கீழ்வேளூர், வேதாரண்யம் மற்றும் திருக்குவளை வட்டம் அடங்கிய கடைகள். (நாகப்பட்டினம் கோட்டம்)<br><br>2. மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி, மற்றும் குத்தாலம் வட்டம் அடங்கிய கடைகள் (மயிலாடுதுறை கோட்டம்) |
| 8. | ஒப்பந்தப்புள்ளி கோரும் பகுதி மற்றும் கோட்டம். | |
| 9. | விண்ணப்பத்தாரரது விபரம் (அரசு துறை/தனியார் துறை போன்றவை) | |
| 10. | இத்துறையில் முன் அனுபவம் உள்ளதா? | |
| 11. | வேறு அரசு துறை, கழகம், வாரியம் போன்றவற்றில் பணி மேற்கொண்டிருப்பின் அதன் விபரம் | |
| 12. | விண்ணப்பதாரர் வருமான வரி செலுத்துபவரா? ஆம் எனில் வருமான வரி செலுத்தும் (PAN) எண்: (நகல் இணைக்கவும்) | |
| 13. | செலுத்தப்பட்ட பிணை வைப்புத் தொகை (E.M.D) விபரங்கள். | |
| 14. | ஒப்பந்த காலம் | உரிம காலம் 01.01.2017 – 31.12.2017 வரை ஒரு வருடம் (தற்காலிகமானது, மாறுதலுக்கு உட்பட்டது) |
| 15. | அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை<br>மதுபான (பெட்டி ஒன்றுக்கு) :ரூ.<br><br>பீர் (பெட்டி ஒன்றுக்கு) :ரூ.<br><br>காகிதக் கழிவுகள் (கிலோ ஒன்றுக்கு) :ரூ. | <br><br>2.00 (ரூபாய் இரண்டு மட்டும் )<br><br>1.90 (ரூபாய் ஒன்று பைசா தொண்ணூறு மட்டும்)<br><br>25.10 (ரூபாய் இருபத்து ஐந்து பைசா பத்து மட்டும்) |
| 16. | டெண்டர் கோரும் தொகை<br><br>மதுபான பெட்டி ஒன்றுக்கு) :ரூ.<br>பீர் (பெட்டி ஒன்றுக்கு) :ரூ.<br>காகித கழிவுகள் (கிலோ ஒன்றுக்கு)<br>(எண்ணால் மற்றும் எழுத்தால் எழுதவும்) | |

மேற்கூறிய தொகைக்கு மத்திய மாநில அரசு நடைமுறையில் உள்ள விற்பனை வரி, சர்சார்ஜ் மற்றும் இதர வரிகள் முதலியவற்றை தவறாது செலுத்த சம்மதிக்கிறேன்.

மேற்கண்ட அனைத்தும், நான் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை முழுமையாகப் படித்து, தெரிந்துகொண்டு எழுதியவை ஆகும். மேலே குறிப்பிடப்பட்டவைகளையும், ஒப்பந்தப்புள்ளியில் உள்ள நிபந்தனைகளையும் முழுமையாக ஏற்று இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கிறேன்.

இடம் :

நாள்: விண்ணப்பத்தாரர் கையொப்பம்.

# நிபந்தனைகள்

-----------------------

1. நிர்ணயிக்கப்படும் தொகையை குறைந்தபட்ச தொகையாக வைத்து டெண்டர் முறையில் கோட்டம் வாரியாக அதிகபட்ச விலைப்புள்ளி கோருபவருக்கு மாவட்ட மேலாளரால் மதுபான அட்டைப்பெட்டிகள் மற்றும் காகிதக் கழிவுகள் சேகர உரிமம் அளிக்கப்படும். ஒப்பந்ததாரர்கள் தங்களது ஒப்பந்த எல்லைக்குட்பட்ட பகுதியில் காலி அட்டைப்பெட்டிகள் மற்றும் காகிதக் கழிவுகளை தமது சொந்த பொறுப்பில் (போக்குவரத்து செலவு) எடுத்துச்செல்ல வேண்டும்.

2. இந்த உரிம காலம் 01.01.2017 முதல் 31.12.2017 வரை உள்ள ஓராண்டு காலமாகும். இது முற்றிலும் ஒரு தற்காலிகமான அனுமதி மட்டுமே. ஒவ்வொரு மாதமும் ஒப்பந்ததாரரின் செயல்பாடுகள் மாவட்ட மேலாளரால் கூர்ந்து ஆய்வு செய்யப்படும்.

3. ஒப்பந்ததாரர்களின் செயல்பாடுகளில் குறைபாடுகள் இருந்தாலோ, முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டாலோ உரிய விசாரணைக்கு பின்னர் உரிமம் ரத்து செய்வது மட்டுமின்றி முன் வைப்புத்தொகையை டாஸ்மாக் நிறுவனமே தக்க வைத்துக் கொள்ளவும், டாஸ்மாக் நிறுவனத்திற்கு முழு உரிமையும் உண்டு.

4. தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் ரூ.1,00,000/-க்கான காப்புத்தொகை மாவட்ட மேலாளர், டாஸ்மாக் லிட்., நாகப்பட்டினம் மாவட்டம் என்ற பெயரில் கும்பகோணத்தில் மாற்றதக்க வகையில் வங்கி வரைவோலையாக சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஒப்பந்தக்காரர் வருமான வரி செலுத்துபவராயின், டாஸ்மாக் நிறுவனத்தின் காலி அட்டைப்பெட்டி உரிமம் பெற்று செயல்பட்ட காலத்திற்கு தொடர்புடைய தனது வருமான வரி விபரங்களை வருமான வரி துறைக்கு சமர்ப்பித்திருந்தால் அதன் விபரங்களை டாஸ்மாக் நிறுவனத்திற்கு அளிக்கவேண்டும்.

6. பிரதி மாதம் 5ந்தாம் தேதிக்குள்ள காலி அட்டைப்பெட்டிகளை சேகரித்து அப்புறப்படுத்திவிட வேண்டும். எக்காரணம் கொண்டும் டாஸ்மாக் கடைகளில் காலி அட்டைப்பெட்டிகள் சேகரித்து வைக்கக்கூடாது. சில்லறை விற்பனைக் கடைகளில் சேகரிக்கப்படும் காலி அட்டைப்பெட்டிகளுக்குரிய கிரயத்தொகையினை சம்பந்தப்பட்ட கடை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

7. ஒவ்வொரு வாரமும் கடை மேற்பார்வையாளருக்கு கடை வாரியாக எடுக்கப்பட்ட காலி அட்டைப்பெட்டிகள் விவரத்தையும் அதற்குண்டான தொகை விவரத்தையும் மாவட்ட மேலாளர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

8. மேற்படி உரிமத்தை ஒப்பந்ததாரர் வேறு எவருக்கும் மாற்றித் தரக்கூடாது. இவ்விற்பனையை டாஸ்மாக் அனுமதி பெறாத வெளி நபர் கண்காணிக்கவும் அனுமதிக்கக்கூடாது.

9. காலி அட்டைப்பெட்டிகள் சேகரிப்பு தொடர்பான கணக்கு வழக்குகளை டாஸ்மாக் நிர்வாகம் கோரினால் அந்த விபரங்களை டாஸ்மாக் நிறுவனத்திற்கு உடன் அளிப்பது உரிமதாரரின் கடமையாகும்.

10. அரசு அல்லது டாஸ்மாக் நிறுவனம் அவ்வப்போது விதிக்கும் இதர கட்டுப்பாடுகள், வழிகாட்டுதல்கள், விதிகள் போன்றவற்றிற்கு முழுதும் ஒப்பந்தக்காரர் கட்டுப்படவேண்டும்.

11. ஒப்பந்ததாரருக்கும் டாஸ்மாக்கிற்கும் ஏதாவது வழக்கு ஏற்படின் வழக்கின் எல்லை ஒப்பந்தம் செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளரின் அதிகார எல்லைக்குட்பட்டதாகும்.

12. அரசின் பிற துறைகள் இது தொடர்பாக ஏற்கனவே விதித்துள்ள அல்லது விதிக்கும் அனைத்து சட்டத்திட்டங்களும் ஒப்பந்தக்காரரை கட்டுப்படுத்தும்.

13. அரசு கொள்கையில் மாற்றம் ஏற்படின் இந்த ஒப்பந்தம் தானாகவே முடிவுறும்.

14. பதினைந்து நாட்கள் (15) முன்னறிவிப்பு கொடுத்து இந்த ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவர டாஸ்மாக் நிறுவனத்திற்கு முழு உரிமையுண்டு.

15. காலி அட்டைப்பெட்டி சேகரம் செய்ய உரிமம் பெற்றவர் மத்திய / மாநில அரசுகளால் அவ்வப்பொழுது அமுல்படுத்தப்படும் மத்திய / மாநில வரிகளை, உதாரணமாக விற்பனை வரி, சேவை வரி, வருமான வரி (TDS, TCS, etc.) சுங்க வரி மற்றும் பிறவரிகள் அல்லது கட்டணங்கள், உரிமக் கட்டணத்திற்கு மேலாக செலுத்த வேண்டும். மேலும், அரசு துறை நிதி நிறுவனங்கள்/ ஆணையங்களோடு சட்டப்படி பதிவு செய்யவேண்டுமாயின் அதற்கும் கட்டுப்பட வேண்டும். இவைகளை தவிர, பணியாளர்கள், சேமநலநிதி ஆணையம் மற்றும் பணியாளர் காப்பீட்டு கழகத்தால் (ESIC) ஆணைகள் ஏதாவது பிறப்பிக்கப்பட்டால், அதற்கும் கட்டுப்பட வேண்டும்.

16. மதுபானக்கிடங்குகளிலிருந்து சில்லறை மதுபான விற்பனை கடைகளுக்கு கொண்டு செல்லப்படும் மதுபான பெட்டிகள்/பீர் பெட்டிகள் அளவிற்கேற்ப காலி அட்டைப்பெட்டிகளுக்குரிய தொகையை அப்போதே கடை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்து விட வேண்டும்.

விண்ணப்பதாரர் கையொப்பம்.